DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -18

| | | |
|---|---|---|
| Name | : திரு. தணிகாசலம் | Caste: |
| Father's Name: | திரு. ரங்கநாதன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 10th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8 and A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**Date: 10.01.2024**

**முதல் விசாரணை**

நான் வங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்கிறேன். இறந்துபோன காசிநாதன், மகாலிங்கம், தர்மலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரிகளுக்கும், காசிநாதன் குடும்பத்திற்கும் பிரச்சனை எதாவது இருந்ததா என்று எனக்கு தெரியாது. ( விடைபொறுத்திய கேள்வி கேட்பதாக எதிரிகள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது.)

எங்கள் ஊரில் நடந்த கொலை சம்மந்தமாக என்னை சாட்சியாக போட்டு இருக்கிறார்கள். கொலைசெய்யப்பட்டவர்களின் பெயர்கள் எனக்கு தெரியாது. சம்பவதினத்தன்று காலை சுமார் 11.00 மணியளவில் நான் எனது தோட்டத்தில் தண்ணீர் கட்டிகொண்டிருந்தேன். ஊருக்குள் சத்தம் கேட்டு நான் வந்து பார்த்தேன். நான் வந்து

பார்த்தபோது ஊருக்குள் நிறைய போலிசார் இருந்தார்கள். ஊரில் அனைவரையும் போலிசார் அந்த கொலை வழக்கு சம்மந்தமாக பிடிப்பதாக சொன்னார்கள் அதனால் நான் மீண்டும் வயலுக்கு போய்விட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

என்னுடன் பிறந்தவர்கள் 2 பேர். தம்பி பெயர் ஜெய்சங்கர். தங்கை பெயர் சசிகலா. அந்த சசிகலா தான் இவ்வழக்கின் ஆஜர் 9 ஆம் எதிரி என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ஊருக்குள் சென்று பார்த்தபோது பழனி என்ற சாட்சி இருந்தாரா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றாலும், அந்த விசாரணையில் நான் கடந்த 2007 ஆம் ஆண்டு நடந்த என் தங்கை கணவரான தேசிங்குபாலன் கொலை சம்மந்தமாக காசிநாதன் குடும்பத்தினருக்கும், எதிரிகள் ரவிசந்திரன், திருஞானம், மற்றும் அவர்களை சார்ந்தவர்களுக்கும் பகை இருந்து வந்ததாகவும், வழக்கு சம்பவ தினத்திற்கு 15 நாட்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு சுமார் 10.00 மணியளவில் நானும், எங்களது ஊரை சேர்ந்த பழனியும் எதிரி ரவிசந்திரனின் வீட்டின் வழியே வந்துகொ்ண்டிருந்தபோது அவரது வீட்டிற்குள் பேச்சு சத்தம் கேட்கவே நாங்கள் மறைந்து இருந்து உள்ளே என்ன நடக்கிறது என்று கவனித்ததாகவும், அந்தவீட்டிற்குள் எதிரிகள் பாரதிதாசன், திருஞானம், காளிதாஸ், பாபு, ஸ்ரீதர், விஜய், சசிகலா, கனகவள்ளி மற்றும் சிலர் உட்கார்ந்திருந்ததாகவும், எதிரி பாரதிதாசன் நம் திட்டம் வெற்றி பெறுவதற்கு இன்னும் சில நாட்கள் தான் இருக்கிறது, தேசிங்குபாலனை கொன்ற பிரபு, தர்மலிங்கம், காசிநாதன் மற்றும் அவர்கள் குடும்பத்தை சார்ந்தவர்களின் தலையை எடுத்தால் தான் நம் தலைமைக்கு ஒருமரியாதை என்று ஆவேசத்துடன் பேசியதாகவும், அதற்கு மற்றவர்கள் விரைவில் வெற்றிபெறுவோம் என்று ஆவேசத்துடன் சொன்னதாகவும், அந்த விவரத்தை நாங்கள் காசிநாதன் மனைவி ஜானகியிடம் கூறியதாகவும், இதுபோல் பலதடவை பாரதிதாசனும், அவரை

சார்ந்தவர்களும் காசிநாதன் குடும்பத்தை அழிக்கவேண்டும் என்று பேசிகொண்டதாக கூறினார்கள் என்றும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

16.05.2008 அன்று காலையில் நான், எனது தாயார் காசியம்மாள், மனைவி மகரதவள்ளி ஆகியோருடன் வீட்டில் இருந்ததாகவும், அப்போது காலை 10.00 மணியளவில் எனது வீட்டருகே ஏய் வெட்டுங்கடா, எவனையும் விடாதீங்கடா என்று என் தங்கை சசிகலாவின் குரலை கேட்டு நாங்கள் அனைவரும் வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தபோது எதிரிகள் ரவிசந்திரன், திருஞானம், காளிதாஸ்,பழனிசாமி, ராஜதுரை, தினேஷ், ராமசந்திரன் மகன் ரமேஷ், சிலம்பரசன், பாஸ்கரன், சக்திவேல் மகன் ரமேஷ், பிரபாகரன், சுரேஷ், விஜய், ஜவகர்பாபு, ஸ்ரீதர், சசிகலா, அவரது மாமியார் கனகவள்ளி, ஆகியோர் கைகளில் பயங்கர ஆயுதங்களுடன் பிரபு, சுரேஷ் ஆகியோரை துரத்திகொண்டு வந்து, எதிரி ரவிசந்திரன் சுரேசை வீச்சருவாளால் வெட்டியதாகவும், எதிரி திருஞானம் சுரேசை மாறிமாறி வெட்டியதாகவும், எதிரிகள் பழனிசாமி, பிரபாகரன் ஆகிய இருவரும் பிரபுவை மாறிமாறி வெட்டியதாகவும், எதிரி பழனிசாமி பிரபுவின் தலையை தனியாக வெட்டி காலால் உதைத்துகொண்டு காளியம்மன் கோவில் பக்கம் சென்றதாகவும், மற்றவர்கள் சேர்ந்து ராஜலிங்கம் மற்றும் மகாலிங்கத்தை துரத்திகொண்டு போனார்கள் என்றும், பிரபுவும், சுரேசும் அங்கேயே இறந்துவிட்டார்கள் என்றும், எதிரி பழனிசாமி பிரபுவின் தலையை ரோடு முழுவதும் காலால் உதைத்துசென்று காளியம்மன் கோவில் பின்புறமுள்ள சக்திவேல் மகன் ரமேஷ் வீட்டிற்கு முன்புறம் கொண்டு போட்டதாகவும், ராஜலிங்கம் மற்றும் மகாலிங்கத்தை துரத்திகொண்டு சென்றவர்கள் மகாலிங்கம், காசிநாதன், தர்மலிங்கம், ஜானகி ஆகியோரை வெட்டிவிட்டு தர்மலிங்கத்தின் தலையை தனியே அறுத்து சக்திவேல் மகன் ரமேஷ் என்பவர் காளியம்மன் கோவில் முன்புறமுள்ள சூலாயுதத்தின் மேல் குத்தியதாகவும், ஊர்மக்கள் கூடியவுடன் எதிரிகள் ஆயுதங்களுடன் ஓடிவிட்டதாகவும், ஜானகியை தவிர மற்ற அனைவரும் இறந்துவிட்டதாகவும், நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை.

நான் சேலம் சிறார் நீதிமன்றத்தில் இளவர் எதிரிகள் பிரபாகரன், ராஜதுரை ஆகியோர்கள் மீதான வழக்கு சம்மந்தமாக சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த நீதிமன்றத்தில் நான் "கிழக்கு தெருவில் கூச்சலிடும் சத்தம் கேட்டது. நான் தண்ணீரை நிறுத்திவிட்டு வந்து பார்த்தபோது பாரிவள்ளல் மகனை வெட்டிவிட்டு மேற்கு பார்த்து சென்றுவிட்டார்கள். அவரின் முண்டம் மட்டும் என் வீட்டிலிருந்து கொஞ்ச துாரம் தள்ளி ரோட்டின் ஓரமாக கிடந்தது. தலை இல்லை. சங்கரின் அப்பா காசிநாதன் மற்றும் சங்கர் ஆகிய இரண்டுபேரையும் மேற்கே வெட்டி போட்டுவிட்டதாக சொன்னார்கள். போஸ்ட் ஆபிஸ் அருகே ஒரு சின்ன பையனை வெட்டிவிட்டதாக சொன்னார்கள். தர்மலிங்கத்தை எங்கள் ஊரில் சங்கர் என்று தான் அழைப்போம்" என்று முதல் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சியின் மேற்படி சாட்சி வாக்குமூலத்திலுள்ள மறுக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.19. ( சாட்சிகளின் வாக்குமூலங்கள் சிறார் நீதிகுழும CA.No.99/2023 மனு பிரகாரம் பெறப்பட்டுள்ளதாக அரசுதரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு)

நான் அதே நீதிமன்றத்தில் எனது குறுக்கு விசாரணையில் "எங்கள் ஊரில் இருந்த கோவில் சம்மந்தமாக காசிநாதன் தலைமையில் ஒரு பிரிவும், ரவிசந்திரன் தலைமையில் ஒரு பிரிவும் செயல்பட்டு இரு தரப்பினரும் சண்டை போட்டுகொண்டதாகவும், அதன் காரணமாக ரவிசந்திரன் தலைமையிலுள்ள தேசிங்கு பாலனை காசிநாதன் குடும்பத்தினர் வெட்டிவிட்டதாகவும் சொன்னால் சரிதான். அதன் காரணமாக ரவிசந்திரன் தலைமையில் உள்ளவர்கள் காசிநாதன் தரப்பினரை வெட்டினார்கள் என்றால் விரோதம் என்று தெரியும்." என்று சொல்லவில்லை. சாட்சியின் மேற்படி சாட்சி வாக்குமூலத்திலுள்ள மறுக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.20.

போலிசார் விசாரணையில் நான் நடந்த சங்கதிகள் அனைத்தையும் சொல்லிவிட்டு, சிறார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது பல உண்மைகளை மறைத்தும், சில உண்மை சங்கதிகளை மட்டுமே சொல்லியிருக்கிறேன் என்றாலும், தற்போது 9ஆம் எதிரி எனது தங்கை என்பதால் எதிரிகளை வழக்கிலிருந்து

காப்பாற்றுவதற்காக உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சிறார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், கேள்விபட்டதாகவும் தான் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரிதான். சிறார் நீதிமன்றத்தில் நான் போலிசார் சொல்லிகொடுத்தன் அடிப்படையில் தான் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரிதான்.

**13 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

13 ஆம் எதிரி சம்பவம் நடப்பதற்கு சுமார் 20 வருடங்களுக்கு முன்பாகவே காட்டுமன்னார்கோவில் என்ற ஊருக்கு சென்று குடியேறிவிட்டார் என்றால் சரிதான். அவர் 20 ஆண்டுகளாக சிதம்பரத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துநராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான்.

**8 ஆம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**3, 6 ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

**நீதிமன்ற கேள்வி**

கேள்வி– நேற்று இந்நீதிமன்றத்தில் அ.சா.16 ஆக விசாரிக்கப்பட்ட காசியம்மாள் உங்கள் தாயாரா?

பதில் – ஆமாம்.

மேற்கண்ட கேள்வியை பொறுத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.